மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை
முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை

இடைக்கால மனு எண். 3/2025
இன்
அசல் வழக்கு எண். 115/2019

1.வள்ளிக்கொடி
2.ரவிச்சந்திரன்
3.வாசுகி
4.மீனாட்சி
5.லெட்சுமி ..... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. மலர்
2. சுந்தரகண்ணன்
3. சார்பதிவாளர், மானாமதுரை ..... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 14.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவித்துள்ளநிலையிலும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

1. மனுதாரர்கள் தரப்பில் ஆர்டர் 5 ரூல் 20 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு பதிலமை மாற்று சார்பு செய்ய தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்திட அனுமதியளிக்க உத்தரவு வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

2. மனுவின் சுருக்கம்:

தாவா வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி சுந்தரகண்ணன்

என்பவர் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்றத்தின் மூலமாகவும், தபால் மூலமாகவும் பல தடவை சம்மன் அனுப்பியும் சார்பு செய்ய இயலவில்லை என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக பதிலமை மாற்று சார்பு செய்திட தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்திட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :–

இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் சுந்தரகண்ணன் என்பவருக்கு நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்றத்தின் மூலமாகவும், தபால் மூலமாகவும் பல தடவை சம்மன் அனுப்பியும் சார்பு செய்ய இயலவில்லை என்றும், ஒருமுறை சம்மனை வாங்காமல் மறுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் சிபிசி ஆர்டர் 5 ரூல் 20ன் படி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்து சார்பு செய்திட கேட்டுள்ளார்கள்.

மனுதாரர்கள் கூறியுள்ள காரணங்கள் ஏற்கதகுந்த நிலையில் உள்ளது. 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மனுவானது நீதியின் நலன் கருதி செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 நவம்பர் மாதம் 20ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.20 04:34:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.20 04:34:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

DISTRICT MUNSIF COURT
MANAMADURAI

ORDER

I.A.No.3/2025
in
OS. No. 115/2019

Dated: 20.11.2025